பக்கங்கள் 20+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 19 திங்கட்கிழமை 04.08.2025 | அதிர்வு 04

## ரணிலின் செயலாளர் சமன் நாளை சி.ஐ.டிக்கு அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் 06▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செம்மணிப் புதைகுழியில் இன்று ஸ்கான் பரிசோதனை ஆரம்பம்

## நாளை சான்றுப்பொருள்கள் காட்சிப்படுத்தல்



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் தற்போது அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டு மனிதப் புதைகுழிகளுக்கு மேலதிகமாக வேறு மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றனவா என்பதனைக் கண்டறியும் நோக்குடன் ஸ்கான் பரிசோதனை இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம் பரந்துபட்ட ஸ்கான் பரிசோதனை நடவடிக்கையை முன்னெடுக்கப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகள் கிடைக்கப் பெறவில்லை

இந்நிலையில், ஸ்ரீ ஜெயவர்வத்தனபுர பல்கலைக் கழகத்தில் உள்ள ஸ்கானர் கருவியை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஊடாகப் பெற்று அதைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. 06▶





# செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு விஜயம்

(பிரபாகரன் டிலக்சன்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர்களான கலாநிதி கெஹான் தினுக் குணதிலக, பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாத்திமா பர்சானா ஹனிபா மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் உட்பட எண்மர் அடங்கிய குழு இன்று செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வுப் பணிகளை அவதானித்தனர்.

இன்று காலை 10 மணியளவில் மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு விஜயம் மேற்கொண்ட மேற்படி குழுவினர், அகழ்வுப் பணிகளின் முன்னேற்றம் குறித்து தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான நிபுணர்கள் குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.






# யோஷித, டெய்சி பாட்டிக்கு எதிரான மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு



பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு மேல்நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை காலை உத்தரவிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி முதல் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில், சட்டவிரோதமாக சம்பாதித்ததாகக் கூறப்படும் 59 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை 3 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்துள்ளதாக யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு இன்று அழைக்கப்பட்ட போது யோஷித ராஜபக்ஷவும் டெய்சி பாட்டியும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

ஆனால், இந்த வழக்கை விசாரணை செய்யும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன விடுமுறையில் உள்ளதால் வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி இந்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஒரே நாளில் 4 ஆயிரத்து 479 பேர் பொலிஸிடம் வசமாகச் சிக்கினர்



இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 479 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 23 பேரும், சந்தேகத்தின் பேரில் 748 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 210 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 161 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 110 சாரதிகளும், கவனக் குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 25 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 202 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




# தாயைக் கழுத்து நெரித்து படுகொலை செய்த மகள்

## குருநாகலில் சம்பவம்

தனது தாயைக் கழுத்து நெரித்துக் கொடூரமாகக் கொலை செய்த மகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல், வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்தெனிய பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய தாயே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று வாரியபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தாயின் 32 வயதுடைய மகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான மகள் மனநல நோயால் பாதிக்கப்பட்டவர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாமியாரைக் கழுத்து நெரித்து படுகொலை செய்த மருமகன்!



## இரத்தினபுரியில் கொடூரம்

தனது மாமியாரைக் கழுத்து நெரித்துக் கொலை செய்த மருமகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் இரத்தினபுரி – டிப்போ சந்தி பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

74 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இரத்தினபுரி – டிப்போ சந்தி பகுதியில் உள்ள வீடொன்றில் சடலம் ஒன்று கிடப்பதாக இரத்தினபுரி பொலிஸாருக்கு நேற்று அதிகாலை தகவல் கிடைத்தது.

இதையடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொலிஸாரின் விசாரணைகளில், மருமகனுக்கும் மாமியாருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான 29 வயதுடைய மருமகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் துப்பாக்கியுடன் வயோதிபர் ஒருவர் நேற்று கைது

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை, அக்போபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சீனிபுரம் பகுதியில் மேற்படி வயோதிபர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.



அக்போபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அக்போபுரம் பகுதியை சேர்ந்த 64 வயதுடைய வயோதிபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சியில் விபத்து; பெண் ஒருவர் படுகாயம்!



கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தர்மபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இன்று திங்கட்கிழமை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன தொடர்ந்து மறியலில்!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீர, மஹர நீதிவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



2010ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பிரசன்ன ரணவீர நீதிமன்றத்தில் சரணடையாமல் பிரதேசத்தைவிட்டுத் தப்பிச் சென்று நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தார்.

பின்னர், பிரசன்ன ரணவீர கடந்த மே மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்துத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 5 லட்சத்து 22 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம்போன கோயில் மாம்பழங்கள்





கோவில் பெருந்திருவிழாவில் விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழங்கள் 5 லட்சத்து 22 ஆயிரத்து 800 ரூபாவுக்கு ஏலம் போனது.

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு மருதடி தான்தோன்றி விநாயகர் கோவில் பெருந் திருவிழாவின் மாம்பழத் திருவிழா நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விநாயகருக்குப் படைக்கப்பட்ட மாம்பழங்கள் ஏலம் விடப்பட்ட போது அடியார்கள் போட்டிபோட்டு கொள்வனவு செய்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**செம்மணி...**

அந்த நடவடிக்கையையடுத்து இன்று திங்கட்கிழமை குறித்த ஸ்கானரைப் பயன்படுத்தி பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

நாளை செவ்வாய்க்கிழமையும் மதியம் வரை ஸ்கான் பரிசோதனை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களான ஆடைகள் மற்றும் பிற பொருட்களைப் பொதுமக்கள் அடையாளம் காட்டும் வகையில் நாளை செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரையில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சான்றுப்பொருள்களைப் பார்வையிட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ரணிலின்...**

ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நாளை செவ்வாய்க்கிழமை அழைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான சமன் ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளரான சாண்ட்ரா பெரேரா குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு இன்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சொத்துப் பட்டியல்

முறையற்ற வழிகளில் சொத்துத் தேடுகின்ற அரசியல்வாதிகள், அரச ஊழியர்களை இலக்கு வைக்கும் தனது கடமையை லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் இறுக்கத் தொடங்கியிருக்கின்றது.

இதன் முதல் நடவடிக்கையாக அரசியல் ரீதியாகப் பொறுப்புகள் மற்றும் பதவிகளில் இருப்போரின் சொத்துகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய விவரங்களை வருடம்தோறும் அவர்களைக் கொண்டே பிரகடனப்படுத்தச் செய்து பதியும் முறைமையை அது முழுமையாகக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த ஒழுங்கு முறையின் கீழ், தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான இவ்வாண்டுக்கான விவரங்களை 2025 ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு நிர்வாக நிலை அரசு அதிகாரிக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்ட ஆணையம், மார்ச் 31 ஆம் திகதிக்குள் தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளை சமர்ப்பிக்க வேண்டிய அதிகாரிகள், ஜூன் 30 ஆம் திகதிக்குள் தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளை அனுப்புவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது எனச் சுட்டிக்காட்டியது.

ஆயினும் அந்த மேலதிக கால அவகாசத்திலும் பல அரச அதிகாரிகள் தங்கள் சொத்து விவரங்கள் மற்றும் கடப்பாடுகளை வெளியிடவில்லை.

இந்தப் பின்புலத்தில், இப்போது ஒகஸ்ட் 31 ஆம் திகதிவரை கால அவகாசத்தை அபராதக் கட்டணத்துடன் நீடித்துள்ள ஆணையம், இத்திகதிக்குள் தங்கள் சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய அறிவிப்புகளை தங்கள் நிறுவனத் தலைவர்களுக்குச் சமர்ப்பிக்கத் தவறும் அதிகாரிகள் மீது 2023 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 90 இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

கூடுதலாக, 2025 ஜூன் 30 முதல் ஒகஸ்ட் 31 வரையான தாமதமான காலத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிவிப்புகளுக்கு அந்தச் சட்டத்தின் விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும் என்றும் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிவிப்புகளை இன்னும் சமர்ப்பிக்காத எந்தவொரு நிர்வாக தர அரசு அதிகாரியும், விதிக்கப்படக்கூடிய எந்தவொரு நிர்வாக அபராதங்களையும் குறைத்துக் கொள்ள, விரைவில் அந்த விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று லஞ்ச ஒழிப்பு ஆணையம் மேலும் கூறியுள்ளது.

ஜூன் 30 க்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளை நிறுவனத் தலைவர்கள் மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், ஒரு நிறுவனத்தின் தலைவர் அறிவிப்பை ஏற்க மறுத்தால், இந்த விஷயத்தை ஆணையத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் ஆணையம் மேலும் கூறியது.

வருடந்தோறும் சொத்து மற்றும் கடப்பாடுகளை அறிவிக்கும் கட்டாயப் பொறுப்பு அரசியல் ரீதியாகப் பதவிகளை வகிக்கும் அரசியல்வாதிகள் விடயத்திலும் இறுக்கமாக நடைமுறைப் படுத்தப் படப்போகின்றது என ஆணையம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.



# கொக்குவில் இந்து முன்பள்ளியின் ‘செயற்பட்டு மகிழ்வோம்’ நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு கொக்குவில் மத்திய சனசமூக நிலையத் தலைவர் ச.பிரதாபன் தலைமையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி அதிபர் திருமதி அசோகா ஆசிரியரின் வழிகாட்டுதலில் முன்பள்ளி சிறார்களின் பான்ட் வாத்தியங்கள் முழங்க விருந்தினர்களுக்கு பூங்கொத்து கொடுத்து மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சிறிமுருகதாஸ் காந்தன் தம்பதியினரும் சிறப்பு விருந்தினராக யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் உதவி அதிபர் த.நிஷாந்தனும் கலந்து கொண்டனர்.

இதன் போது மாணவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்ற பிரதம விருந்தினர் விளையாட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்று விருந்தினர்களால் பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.















# பறவைகளை பாதுகாத்தல் செயற்பாடு நெடுந்தீவுப் பகுதிகளில் முன்னெடுப்பு

இயற்கைக்கான கூட்டிணைவில் சமூகப் பங்களிப்பை மேம்படுத்தல் தொடர்பாக சி.சி.எச். நிறுவனம், இயற்கை ஊக்குவிப்பு கழகம் மற்றும் டயலொக் நிறுவனம் என்பன இணைந்து பறவைகளை பாதுகாத்தல் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளன.

நெடுந்தீவில் மட்டுமே காணப்படும் ஐனெயைெ ஊழரசளநச எனும் பறவையானது மிகவும் அரிதான, ஆபத்தின் விளிம்பில் காணப்படுகின்றது.

Indian Courser பறவையை பாதுகாக்கும் செயற்பாட்டில் நெடுந்தீவுப் பிரதேச செயலகம், வட மாகாண சுற்றுலா பணியகம், நெடுந்தீவு பிரதேச சபை ஆகியன இணைந்துள்ளன.

பறவைகள் சார் சுற்றுலாத் துறையின் முக்கியத்துவம் மற்றும், Indian Courser பறவையின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு சிறுவர்களுக்கும், சிவில் சமூக உறுப்பினர்களுக்கும் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.



இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு துறைமுகம், பிரதான வீதி, குறித்த பறவைகள் காணப்படும் இடங்களில் Indian Courser பறவைகளின் முக்கியத்துவம் பற்றிய பதாதைகள் நடப்பட்டன.

# 'கிளீன் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சித் திட்டத்தில் தென்மராட்சி கரையோரங்கள் துப்புரவு!






தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 'கிளீன் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கோயிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் தனங்களப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட கடற்கரையோரங்களில் துப்பரவு பணிகள் இடம்பெற்றன.

இந்தப் பணியில் இராணுவத்தினர், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், விளையாட்டு கழக உறுப்பினர்கள், மற்றும் பொது மக்கள் இணைந்து கொண்டனர்.

# செம்பாடு இந்து மயானத்தை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை

செம்பாடு இந்து மயானம் படையினரால் மறைத்து அடைக்கப்பட்டுள்ளதால் இந்த மயானத்தைப் பயன்படுத்திய மக்கள் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள இராமியன் இந்து மயானத்துக்குச் சடலத்தைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியில் நீண்டகாலமாக பொது மக்களின் பாவனையில் இருந்த செம்பாடு இந்து மயானம் 1996 ஆம் ஆண்டு போர் காலத்தில் முகாமாகச் செயற்பட்டு தற்போது 52 படையணியின் தலைமை அலுவலகம் இயங்கி வருகிறது.

இந்த முகாமைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்ட போது அங்கு மயானம் இருந்ததை அறியாத படையினர் 30 பரப்பு மயான காணியையும் இணைத்து வேலி அமைத்துள்ளனர்.

இதனால்எழுதுமட்டுவாழ்தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, கரம்பகம் போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்கள் சடலத்தை வேறொரு மயானத்துக்குக் கொண்டு செல்கின்றனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.தெய்வேந்திரம் பிள்ளை மயானத்தை விடுவிக்கக்கோரி பிரதேச செயலகம், பிரதேச சபை, மாவட்டச் செயலகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் போன்றோருக்கு மனு கொடுத்த போதிலும் இதுவரை மயானக் காணி விடுவிக்கவில்லை.

இந்தநிலையில் படையினரால் மறைத்து அடைக்கப்பட்டுள்ள காணி விடுவிக்கக் கோரி ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கருநில பாதுகாப்புப் போராட்டத்துக்கு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் ஆதரவு

**(த.சுபேசன்)**

மன்னாரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "கருநில பாதுகாப்பு" சூழலியல் கவன வீர்ப்புப் போராட்டுக்கு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் பூரண ஆதரவு வழங்குவதாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில், மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் இருக்கின்றது. இந்த மணல் விசேடமாக இல்மனைற் கனிமத்தைக் கொண்டதாக இருப்பதால் அதற்கு உலகளவில் பரந்துபட்ட கேள்வி இருந்து வருகின்றது. இந்த நிலையில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்திரேலிய பல்தேசிய நிறுவனம் ஒன்று குறித்த இல்மனைற் மணலை அகழ்ந்து எடுக்க முயற்சித்து வருகின்றது.

ஆஸ்திரேலிய நிறுவனம் அகழ்வுக்கான சூழலியல் ஆய்வு அறிக்கைக்காக சுற்றுச்சூழல் அதிகார சபையிடம் விண்ணபித்திருந்த நிலையில் அந்த நிறுவனம் ஆய்வு செய்து சாதகமான அறிக்கை வழங்கியுள்ளது என்றும், அதனையடுத்து நிறுவனமான பல்தேசிய நிறுவனங்களுக்கு மணலை அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படக் கூடும் என மன்னார் மாவட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவ்வாறான நிலை ஒன்று உருவாகுமானால் சூழலியல் சார்ந்து பாரிய பின்விளைவுகள் உருவாகும். குறிப்பாக பல்தேசிய நிறுவனங்கள் மன்னாரின் இல்மனைற் மணலை அகழ்ந்தெடுத்தால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னாரின் மக்கள் வாழும் நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து மக்களில் இருப்பையும் கருவறுத்துச் சென்றுவிடும் நிலை உருவாகும்.

எனவே தற்போதைய அரசு, மன்னாரின் சூழலியல் சார்ந்த ஆபத்தைக் கருத்தில் கொண்டு அதற்கான அனுமதிகள் வழங்குவதை நிராகரிப்பதுடன் நிரந்தரமாக கனிம வளங்களை அகழ்வதற்கான தடையையும் வர்த்தமானி மூலம் அறிவித்தல் வேண்டும்.

இந்த இயற்கை அழிவை தடுப்பதற்கும் தமிழ்த் தேசத்தின் இயற்கையையும், பூர்வீக நிலத்தையும், மக்கள் இருப்பையும் பாதுகாக்க கருநில பாதுகாப்பு என்ற கருப்பொருளுடன் எதிர்கால சந்ததியின் நலன்கருதி மன்னார் மாவட்டத்தில் இயற்கையை நேசிக்கும் இளைஞர்கள் எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் முன்னெடுக்கும் சூழலியல் சார்ந்த கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் தனது பூரண ஆதரவை தெரிவித்துக்கொள்கின்றது.- என்றுள்ளது.




# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் தொகுதி அமைப்பாளராக மீண்டும் றியாஸ் நியமனம்

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் மாவட்ட அபிவிருத்தியில் பல்வேறு சேவைகளை செய்த முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஏ.எச்.எம் றியாஸ் புத்தளம் தேர்தல் தொகுதிக்கான ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் அமைப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அமைப்பாளர்களுக்கான நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கட்சியின் செயலாளர் உட்பட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஏ.எச்.எம் றியாஸ் புத்தளம் தேர்தல் தொகுதிக்கானஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் அமைப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று முதல்வரால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் மின்மினி மின்ஹா!

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணம், சம்மாந்துறையை சேர்ந்த 14 வயது மாணவி ஜலீல் பாத்திமா மின்ஹா அண்மையில் அட்டாளைச் சேனையில் இடம்பெற்ற தமிழ் லெட்டர் ஊடக அமைப்பின் 9 ஆவது ஆண்டு நிறைவு அச்சம் தவிர் விழாவில் பொன்னாடை போர்த்தி, பதக்கம் அணிவிக்கப்பட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



காலநிலை மாற்றங்கள், பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனை எதிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு உரைகளை நிகழ்த்திவரும் சிறுமியான இந்த மின்மினி மின்ஹா, சம்மாந்துறை அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில் தரம் 09இல் கல்வி கற்று வருகிறார்.

மரங்களை நடும் செயற்றிட்டம், கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் வேலைத் திட்டம், ஊனுக்கு உதவுவோம் எனும் செயற்றிட்டம், மின்மினி சமூக சேவை அமைப்பு போன்றவைகளின் ஸ்தாபகராக இருந்து வழி நடத்தி வருகிறார்.

இதுவரை 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை சுய முயற்சியில் நட்டுள்ளார். இலங்கை தீவில் விழிப்புணர்வு உரையையும் நிகழ்த்தியுள்ளார்.

இலங்கை தேசத்தில் பற்பல அமைப்புகளால் 75 இற்கும் மேற்பட்ட விருதுகளை பெற்றுள்ளார். "தெற்காசிய நாடுகளில் மிக வயது குறைந்த சுற்றுச்சூழலியல் விழிப்புணர்வாளர்" என்ற சர்வதேச விருதோடு உலகளாவிய ரீதியில் 20 இற்கும் மேற்பட்ட விருதுகளையும், பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்ட சிறுமி ஆவார்.

இவரின் சிறுவயதுப் பணியை பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு அக்கரைப்பற்று மாநகர சபையின் முதல்வரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சபை பேரவை செயலாளர் கலாநிதி எம். கோபாலரட்ணம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.



# அம்பாறை சாத்தாதிஸ்ஸ வித்தியாலயத்தின் கட்டப் பணிகளைப் பார்வையிட்டார் ஆளுநர்



கிழக்கு மாகாண நிதியில் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகளில் உள்ள அம்பாறை சாத்தாதிஸ்ஸ மகா வித்தியாலயத்தின் மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்தையும், கிழக்கு மாகாண நிதியில் 7 மில்லியன் ரூபா செலவில் இறுதிக் கட்ட கட்டுமானப் பணிகளில் உள்ள அதே கல்லூரியின் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடத்தையும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர பார்வையிட்டார்.

இந்த கண்காணிப்பு விஜயத்தின் முடிவில், ஆளுநர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் ஒரு சுருக்கமான கலந்துரையாடலை மேற்கொண்டு பாடசாலையின் தற்போதைய நிலைமை குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.



# வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சம்மாந்துறையில் கோழிக்குஞ்சு வழங்கல்

**(வி.ரி.சகாதேவராஜா)**

சிறுபண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் ஒரு மாத கலவன் கோழிக்குஞ்சுகள் பயனாளர்களிடம் வழங்கும் நிகழ்வு அரச கால்நடை வைத்தியர் டாக்டர் வை.பி.எம்.சஜாத் தலைமையில் சம்மாந்துறை அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் ஒரு கட்டமாக, சம்மாந்துறை பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களில் ஒரு குடும்பத்துக்கு 20 கோழிக்குஞ்சுகள் வீதம் 500 கோழிக்குஞ்சுகள் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. அம்மைத் தடுப்பூசியும் வழங்கி வைக்கப்பட்டது.

முட்டை உற்பத்தியில் கூடுதல் வருமானத்தை உருவாக்குதல், விவசாயிகளின் ஊட்டச்சத்து அளவை மேம்படுத்துதல், வறுமை ஒழித்தல் என்பனவற்றை நோக்கமாக கொண்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிகழ்வுக்குக் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஏ.டெனேஸ்வரன், கால்நடை அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கிளங்கன் வைத்தியசாலைக்கு விஜயம்!



(பொகவந்தலாவ எஸ்.சதீஷ்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா, டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இதன் போது இந்திய தூதுவர் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டார். இதன் போது மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் நிஹால்ஜயசூரிய, மற்றும் வைத்தியசாலையின் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையில் காணப்படும் கூறைப்பாடுகளை நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளித்ததோடு, வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் ஒன்றையும் பெற்றுத் தருவார் என்று உறுதியளித்துள்ளார் என்று மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் நிஹால்ஜயசூரிய குறிப்பிட்டார்.

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலை இந்திய அரசின் நிதியுதவியால் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தலைமன்னார் புனித லவுறேஞ்சியார் ஆலய வருடாந்தக் கொடியேற்றம்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர் நிறைந்து வாழும் மிகவும் பழமைவாய்ந்த பங்காகிய தலைமன்னார் பனித லவுறேஞ்சியார் ஆலய வருடாந்த விழாவை முன்னிட்டு கொடியேற்றம் இடம்பெற்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த ஆலயத்தின் பெருவிழாவை முன்னிட்டு தலைமன்னார் பங்குத் தந்தை அருட்பணி டெனி கலிஸ்ரஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் கொடிமரம் உயர்த்தப்பட்டு பங்குத் தந்தையால் இறைமக்கள் புடைசூழ்ந்து நிற்க புனித லவுறேஞ்சியார் கொடி ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வின்போது பள்ளிமுனை பங்குத் தந்தை அருட்பணி டெஸ்மன் குலாஸ் அடிகளார் மற்றும் பேசாலை உதவிப் பங்குத் தந்தை அருட்பணி அ.கிங்சன் குருஸ் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஒன்பது தினங்கள் மாலை 05 மணிக்கு திருச் செபமாலையுடன் நவநாள்கள் திருவழிப்பாடுகள் நடைபெறும்.

ஒன்பதாவது நாள் நற்கருணை வழிபாடும் பத்தாம் நாள் அதாவது பத்தாம் திகதி காலை 06 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநேசன் அடிகளார் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைத் தொடர்ந்து பனித லவுறேஞ்சியாரின் திருச்சொரூப பவனியும் இறையாசீரும் இடம்பெறும்.





# கல்முனை சமகால விவகாரம் தொடர்பில் முஸ்லிம் எம்.பிக்களுடன் கலந்துரையாடல்

கல்முனையின் சமகால விவகாரங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் முக்கிய கலந்துரையாடல் கல்முனை அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் சிவில் நிறுவனங்களுக்கும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே ஒலுவில் கிறீன் வில்லாவில் இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் திகாமடுல்லவை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிஷாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.அப்துல் வாஸீத் மற்றும் எம்.ஏ. தாஹிர் ஆகியோர் கட்சி பேதங்களுக்கு அப்பால் கலந்துகொண்டு கல்முனை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படுவதை உறுதி செய்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனையிலுள்ள அனைத்து பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள், ஜம்யிய்யதுல் உலமா சபையினர், வர்த்தக சங்க பிரதிநிதிகள், புத்திஜீவிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டு, சமகால பிரச்சினைகள் குறித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், முன்மொழிவுகளையும் முன்வைத்தனர்.

தேசிய மட்டத்தில் சமூக பிரச்சினைகள் நாடாளுமன்றத்துக்கு கொண்டு செல்லப்படவும், கல்முனை பிராந்தியத்தின் இருப்பு மற்றும் எதிர்கால நலன் குறித்த பரிசீலனைகள் முன் கொண்டு செல்வதற்கும் ஏதுவான ஆரோக்கியமான முயற்சியாக இந்தக் கலந்துரையாடலில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்துக்கு அம்பாறையில் வசிக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ. ஆதம்பாபாவுக்கு அழைப்பு விடுத்திருந்தும், முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினையான இந்த பிரச்சினைக்கு தீர்வை பெரும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவில்லை என்று ஏற்பாட்டுக் குழுவினர் கவலை தெரிவித்தனர்.



# உலக தாய்ப்பால் வாரம் அனுஷ்டிப்பு

## | ஓகஸ்ட் முதல் வாரம் |



நடராஜன்
மிருணாளினி



தாய்ப்பால் கொடுப்பது காலம் காலமாகப் பெண்கள் இயற்கையாகவே செய்து வந்த பணி. சமீப காலத்தில் தாய்ப்பால் அளிப்பது பெருமளவில் குறைந்து வருகிறது. தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் தாய்ப்பால் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

தாய்ப்பாலில் அதிசயிக்கத்தக்க ஆற்றல் படைத்த இரசாயனப் பொருள் இருக்கிறது. அது பிறந்த குழந்தையின் செரிமான உறுப்புக்களைப் பாதுகாக்கவும் குறைகளைப் போக்கவும் பெரிதும் உதவுகிறது. தாதுப் பொருள் குழந்தை பிறந்தவுடன் சில நாள்களுக்குச் சுரக்கின்ற சீம்பாலில் அதிக அளவில் இருக்கிறது. இது குழந்தையின் குடல் பகுதிகளை மற்ற அமிலச் சுரப்பால் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கிறது. குழந்தை இனிமேல் சாப்பிடப் போகும் உணவுகளை ஏற்றுக்கொள்ளும் விதமாக பக்குவப்படுத்துகிறது. ஆகவே எல்லா வித சத்துக்களும் அடங்கிய பால் குழந்தையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. தாய் பால் பருகும் குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடன் வளர்வர். காரணம் தாய்ப்பாலில் உள்ள நோய் எதிர்ப்பு திறன்.

தாய்ப்பாலில் குழந்தைக்கு வேண்டிய அனைத்து சத்துப் பொருள்களும் சரியான விகிதத்தில் உள்ளன. மூளை வளர்ச்சி சரியாக அமைய மிகத் தேவையான புரதங்கள், அத்தியாவசிய கொழுப்புச் சத்துகள் தாய்ப்பாலில் மட்டுமே உள்ளன. தாய்ப்பால் இயற்கையிலேயே சரியான நிலையில் உடனுக்குடன் புதிதாகக் கிடைக்கும் உணவு. உற்பத்தி செய்யப்படாத உணவுப் பொருள் என்பதால் எவ்வித மாசுக்கும் இடமில்லை. மாறாகக் கிருமிகளைக் கொல்லும் பொருள்களைத் தன்னகத்தே உடையது அதன் தனிச் சிறப்பாகும் .

தாய்ப்பாலில் உள்ள கொழுப்பு அமிலங்கள் மற்றும் சில பொருள்களின் அற்புதக் கலவை குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் மரணத்தைக் குறைக்க உலக நாடுகள் முனைந்து செயல்படுகின்றன. குழந்தை பிறந்த முதல் 2 ஆண்டுகள் உடல், மன, மூளை வளர்ச்சி அதிவேகமாக இருக்கும். இந்தப் பருவத்தில் குழந்தையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஏதேனும் தடை ஏற்பட்டால் வாழ்நாள் முழுதும் சீராக்க முடியாத பாதிப்பை ஏற்படுத்தும். வளர்ச்சிக்கு உறுதுணையாக தாய்ப்பால் அளிப்பது தாய்மார்களின் கடமை.

6 மாதங்களுக்காவது தாய்பாலூட்ட வேண்டுமென மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். பிறகு தாய் அல்லது குழந்தை ஆகிய இருவரில் ஒருவர் வேண்டாம் எனத் தீர்மானிக்கும் வரை குழந்தைக்குத் தாய்ப்பால் தேவை. தாய் தன் மார்போடணைத்துப் பாலூட்டுகையில் தொப்புள் கொடிக்குப் பிறகு மறுபடி ஒரு பிணைப்பு உடல் ரீதியாக ஏற்படுகிறது.



இயற்கையாகக் கிடைக்கக் கூடியது தாய்ப்பால். இதற்கு மாற்று எதுவுமே இல்லை, அதில் உள்ள வெண்மையான திரவப் பொருளே குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது, இவை எல்லாவற்றையும் விட குழந்தைக்கும் தாய்க்கும் உளவியல் ரீதியாக ஒருபிணைப்பினை ஏற்படுகிறது.

பெண்கள் தாய்மை அடையும் போது தான் முழு பெண்மையை அடைகின்றனர். தாய்மை பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம். குழந்தை பிறந்ததுமே தாய்ப் பால் கொடுப்பது மிகவும் அவசியம். பிறந்த குழந்தைக்கு வழங்கப்படும் முதல் உணவு தாய்ப்பால்தான். தாய்ப்பாலில் குழந்தைக்குத் தேவையான அத்தனை சத்துக்களும் அடங்கி இருக்கிறது. தண்ணீர் கொழுப்பு புரதம் சர்க்கரை தாதுப் பொருள்கள் ஆகியவை தாய்ப்பாலில் காணப்படுகிறது. ரத்தத்தில் உள்ள குளுக்கோஸ், கல்சியம், வைட்டமின்கள் ஆகியவற்றை மார்பகச் சிற்றறைகள் பிரித்து பாலாக மாற்றுகின்றன.

பிறந்த குழந்தைக்கு தேவைப் படும் போதெல்லாம் உடனடியாக, சுத்தமானதாக, சுகாதாரமாக, சரியான சீதோஷ்ண நிலையில் கிடைப்பதுதாய்ப்பால். தாய்ப்பாலில்தேவை

தொடர்ச்சி ▼

# உலக தாய்ப்பால் வாரம் அனுஷ்டிப்பு

**தொடர்ச்சி▲**

யான தண்ணீர், சத்து வைட்டமின்கள், மலம் இளக்கி ஆகியன இருப்பதால் குழந்தைகளுக்கு வயிறு உபாதை தவிர்க்கப்படுகிறது. 4 மாதம் முதல் 5 மாதத்துக்குத் தாய்ப்பாலை விடச் சிறந்த உணவு கிடையாது. எந்தக் குழந்தை அப்படி வளர்கிறதோ, அந்தக் குழந்தை காது சம்பந்தப்பட்ட நோய்க்கிருமிகளில் இருந்தும், வயிற்றுப் போக்கிலிருந்தும் காப்பாற்றப்படுகிறது. நெடுங்காலப் பயன்கள் என்னவென்றால் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் ஆஷ்துமா, அலர்ஜி, குழந்தையிலேயே எடை பருமன், குழந்தைப் பருவப் புற்றுநோய் இவற்றின் அபாயத்திலிருந்து ஓரளவு தவிர்க்கப்படுகின்றன. 4 மாதத்துக்குத் தாய்ப்பால் அருந்தும் குழந்தை, குழந்தைப் பருவ நீரிழிவு வியாதியிலிருந்து காப்பாற்றப்படுகிறது. குறைமாதத்தில் பிறந்த குழந்தைகள் பின்னால் இரத்த அழுத்த நோயிலிருந்தும் காப்பாற்றப்படுகின்றன. தாயின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிடோசின் என்கின்ற ஹார்மோன் பாசத்தையும் பந்தத்தையும் வளர்க்கிறது. இத்தனை பலன்கள் இருக்கும் தாய்ப்பாலை குழந்தை பிறந்த ஒரு மணிநேரத்துக்குள்ளேயே கொடுப்பது நன்மை பயக்கும்.

இந்த அவசர உலகத்தில் குழந்தை பெற்றுக்கொள்வதென்பது பல்வேறு காரணிகளையும் சிந்தித்துத் தீர்மானிப்பதாக இருக்கிறது. அதில் குழந்தைப் பராமரிப்பும் ஒன்று. கடந்த காலங்களில் குழந்தைக்குத் தாய்ப்பால் இயல்பாக கிடைக்கும் உணவாக இருந்தது. இன்றைய காலகட்டத்தில் அதிலும் குறிப்பாக பணிபுரியும் தாயாக இருப்பின், தாய்ப்பாலா அல்லது புட்டிப்பாலா என்று மனத்தில் ஒரு பட்டி மன்றம் போட்டு முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள்.



ஐரோப்பாவில், இங்கிலாந்தில் தான்மிகக்குறைவாகதாய்ப்பாலூட்டுகின்றனர். அமெரிக்கா முழுவதும் தாய்ப்பாலூட்டுவதை ஊக்குவிக்க பல அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் பாடுபடுகின்றன. டெக்சாஷ் மாகாணத்தில் பாலூட்டுவதற்காக தாய்மார்களுக்கு வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டுமெனச் சட்டம் உள்ளது. உலக தொழிலாளர் நிறுவனமானது வேலை நாள்களில் பாலூட்டும் தாய்களுக்கு ஒரு முறையோ இரு முறையோ அரை மணி நேரம் பாலூட்டும் நேரமாக அங்கீகரித்துள்ளது.

பல இளந்தாய்கள் அலுவலகத்தில் பாலூட்ட சரியான இடம் இல்லாததால் நிறுத்திவிடுகின்றனர். மேல்நாடுகளில் அரசு சாராத தொண்டு நிறுவனங்கள், மகப்பேறடைந்த பெண்களுக்கு வசதிகள் செய்து தரும் பணியமர்த்துநர்களுக்கு பரிசு கொடுக்கிறது.

தாய்ப் பாலூட்டுவதை கணவன், குடும்பத்தினர், பணியமர்த்துநர் மற்றும் சமுதாயம் ஊக்குவிக்க வேண்டும். தாய், நினைத்த இடத்தில் குழந்தைக்குப் பாலூட்டுவதை, குழந்தையைப் பராமரிக்கும் எந்த ஒருசெயலைப் போலவே அங்கீகரிக்க வேண்டும். ஒரு சாதாரணப் பார்வை கூட அசௌகரிய உணர்வை ஏற்படுத்தக் கூடும். அதன் காரணமாக, தாய் பாலூட்டுவது தடைபடலாம்.

மேல்நாட்டில் தாய்ப்பால் வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரத்த தானத்தைப் போல தாய்ப்பால் தானமும் உயிர் காக்கும் செயலாகக் கருதப்படுகிறது. சேமிக்கப்பட்ட தாய்ப்பால் அநாதைக் குழந்தைகளுக்கும், எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிறது. அமுதமான தாய்ப்பால் கொடுப்பதில் பின்பற்றப்படும் தவறான நடைமுறைகளும் உள்ளன. உதாரணமாக, தாய்ப்பால் புகட்டுவதைத் தாமதமாகத் தொடங்குகின்றனர். சிலர், தாய்ப்பால் அளித்தால் அழகு கெட்டுவிடும் என்ற தவறான எண்ணம் கொண்டிருக்கின்றனர். பாசத்தோடு புகட்டாமல் கடமைக்குச் செய்பவர்கள் உள்ளனர். பிறர் சொல் கேட்டு தாய்ப்பால் அளிப்பதை நிறுத்துகின்றனர்.

குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வளவு முக்கியமோ, பாலூட்டும் செயலானது, தாய்க்கும் முக்கியமானது. தாய்ப்பால் ஊட்டாத பெண்களுக்கு மார்பு மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் வரும் அபாயம் உள்ளது. பாலூட்டும் தாய் அடுத்த கர்ப்பத்தைத் தள்ளிப்போடுகிறாள். ஒரு தாய் குழந்தைக்குப் பாலூட்டுவது என்பது அந்தக் குழந்தையின் நலத்துக்காக மட்டுமல்ல. தனது குழந்தையை தானே போஷித்து வளர்ப்பதில் பெருமை அடைகிறாள்.

ஒரு நாள் பாலூட்டுவதில் குழந்தையின் இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படுகிறது, நோய் எதிர்க்கும் சக்தி கூடுகிறது. குழந்தையும் தாயும் சேர்ந்தே அளப்பரிய நன்மை பெறுகின்றனர். நம் கலாசாரத்தில் தாய்ப்பால் ஊட்டலுக்கு தொன்றுதொட்டே சரியான இடம் கொடுக்கப்பட்டுள்ளதை இலக்கியங்களில் இருந்தும் காவியங்களில் இருந்தும் அறியலாம். புட்டிப்பால் என்பது நாகரிக காலத்தின் இடைச் செருகலே. தாய், பாலை மட்டுமா ஊட்டுகிறாள்? பாலோடு வாஞ்சையையும் பாசத்தையும் மட்டுமல்ல, பண்பையும் சேர்த்தல்லவா ஊட்டுகிறாள்? எனவே நாமும் பெண்மையின் தாய்மையைப் போற்றுவோம். தாய்ப்பால் ஊட்டலை வலுப்படுத்துவோம்.





# இந்திய முன்னாள் பிரதமரின் பேரனுக்கு ஆயுள் தண்டனை

கர்நாடகவைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரஜ்வால் ரேவண்ணாவுக்கு தென்னிந்திய நீதி மன்றமொன்று ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

34 வயதான அவர் தமது வீட்டுப் பணிப்பெண்ணை பாலியல் வன் கொடுமை செய்த குற்றத்துக்காக அவருக்கு இந்த தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் எச்.டி. தேவகௌடாவின் பேரனும், சக்திவாய்ந்த அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவருமான பிரஜ்வால் ரேவண்ணா, 2023 ஆம் ஆண்டில் சமூக ஊடகங்க ளில் பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தும் பல காணொலிகள் வெளியாகின. இதை தொடர்ந்து 47 வயதுடைய வீட்டு பணிப்பெண் ஒரு வர் முறைப் பாடளித்தார்.

முன்னதாக குற்றச்சாட்டுகளை மறுத்த அவர், கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் தாம் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னிப்புக் கோரினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் பார தீய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத் துள்ள ஜனதா தளம் கட்சியை பிரஜ் வால் ரேவண்ணா பிரதிநிதித்துவப் படுத்துகிறார்.

## 2024 தேர்தலில் முறைகேடு:

# 1.5 லட்சம் வாக்காளர்கள் போலியானவர்கள்: ராகுல்



2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்த லில் வாக்களித்த 1.5 லட்சம் பேர் போலி யானவர்கள் என மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரி வித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலில் 15 இடங்க ளில் மோசடி செய்யாமல் இருந்திருந் தால் நரேந்திர மோடி பிரதமராகியிருக்க முடியாது எனவும் ராகுல் காந்தி குறிப் பிட்டார்.

காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த மோசடியைக் கண்டுபிடிக்க தமக்கு 6 மாதங்கள் தேவைப்பட்டதாக வும், அதற்காக கடுமையாக உழைத்தத கவும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

# தி.மு.க. கூட்டணியில் இணைய மாட்டேன்

## ஓ.பி.எஸ். விளக்கம்



நான் தி.மு.க. உடன் கூட்டணி வைக்கப் போவதாகவும், அக்கட்சியில் இணையப் போவதாகவும் பரவும் தகவலில் எள்ளளவும் உண்மை யில்லை என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அண்மையில் முதல்வர் ஸ்டா லினை அவரது இல்லத்தில் சந்தித் தார் ஓ.பி.எஸ். அதோடு தேசிய ஜன நாயக கூட்டணியில் இருந்து விலகு வதாக ஓ.பி.எஸ். தலைமையிலான அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு அறிவித்தது. அடுத்த ஆண்டு தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இது அரசியல் ரீதியாக பேசு பொருளானது. இது குறித்து தி.மு.க. கூட்டணி கட்சி கள் மற்றும் அ.தி.மு.க, பா.ஜ.க. கூட் டணி கட்சியினர் தங்களது கருத்தை தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், இன்று ஓ.பி.எஸ். அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இல்லம் திரும்பியவர்களை அவர்களது இல்லம் தேடிச் சென்று நலம் விசாரிப்பதும், உயிரிழந்தவர் களின் உறவினர்களை சந்தித்து துக் கம் விசாரித்து அஞ்சலி செலுத்துவதும் தமிழ்ப் பண்பாடு.

இந்த வகையில், முதல்வர் ஸ்டா லின் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு, பல்வேறு சிகிச்சைகளுக்குப் பிறகு பூரண குணமடைந்து இல்லம் திரும்பிய நிலையில், அவரது வீட் டிற்கு நேரில் சென்று நலம் விசாரித் தேன். இதேபோன்று அவரது மூத்த சகோதரர் மு.க.முத்து மறைவு குறித்து இரங்கல் தெரிவித்தேன்.

இந்தச் சந்திப்பு தமிழ்ப் பண்பாட் டின் வெளிப்பாடு. என்னுடைய மனை வியும், என்னுடைய தாயாரும் இறந்த போது, என்னை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியவர் முதல்வர் ஸ்டா லின் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சந்திப்பில் எவ்வித அரசியலும் இடம்பெற வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.




# காசாவில் சிறுவர்கள் மீது இஸ்ரேல் துப்பாக்கிச்சூடு





காசாவில் சிறுவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப் படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் இந்த குற்றத்தைப் புரிவதாக பலஸ்தீன தரப்பு தெரிவிக்கிறது.

சர்வதேச ஊடக நிறுவனமான பி.பி.சி. வெளியிட்டுள்ள ஆய்வுகளின் தொகுப்பில் 95 சிறுவர்கள் அவ்வாறு இறந் துள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.

சிறுவர்கள் சுடப்படுவது பற்றிக் காசாவில் உள்ள மருத்துவர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாகக் சிறுவர்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல் தடை செய்யப்பட்டவை மற்றும் அவை சர்வதேச சட்டங்களுக்கு எதிரானவை என அங்கு பணிபுரியும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# காசாவில் பணய கைதிகளாக இருப்பவர்களுக்கு உணவு, மருத்துவ வசதிகளை வழங்குங்கள்

## இஸ்ரேலிய பிரதமர் கோரிக்கை



காசா பகுதியில் பணய கைதிக ளாக இருப்பவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகளை வழங் குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்தி யத் தலைவர் ஜூலியன் லாரிசனு டனான சந்திப்பின் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இஸ்ரேலிய அதிகாரிகளின் கூற் றுப்படி, தற்போது காசா பகுதியில் 50 பணயக் கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்களில் 20 பேர் மட்டுமே உயிருடன் இருக்கின்றனர் என நம்பப்படுகிறது.

இதேவேளை காசா பகுதியில் பணயக் கைதிகளின் நிலைமை குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நாளை விசேட அமர்வு ஒன்றை நடத்தவுள்ளதாக இஸ்ரேல் வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.



# சவூதி அரேபியாவில் ஒரே நாளில் எட்டுப் பேருக்கு மரண தண்டனை

சவூதி அரேபியாவில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட 8 பேருக்கு ஒரே நாளில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்திய குற்றத்துக்காக, நாட்டின் தெற்கு பகுதியான நஜ்ரானில் 4 சோமாலியர்கள் மற்றும் 3 எத்தியோப்பியர்கள் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஒரு சவூதி குடிமகனுக்கு, தனது தாயைக் கொலை செய்த குற்றத்துக்காக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து சவூதி அரேபியாவில் 230 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதில் 154 பேர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காகத் தூக்கிலிடப்பட்டனர்.

சவூதியில் 2022 ஆம் ஆண்டில் 19 பேரும், 2023 ஆம் ஆண்டில் 2 பேரும், 2024 ஆம் ஆண்டில் 117 பேரும், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காகத் தூக்கிலிடப்பட்டனர்.

கடந்த 2024ஆம் ஆண்டு 338 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன.



# யேமனில் படகு மூழ்கி விபத்து 50 இற்கும் மேற்பட்டோர் பலி

யேமன் கடற் பகுதியில் படகு மூழ்கி விபத்துக்குள்ளானதில் 50 இற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு நிலவும் சீரற்ற வானிலையால் குறித்த படகு விபத்துக்குள்ளானதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

விபத்தின் போது அந்த படகில் 150 பேர் பயணித்தனர் எனவும் அதில் அதிகமானோர் எத்தியோப்பிய நாட்டவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடா முரசு
திங்கட்கிழமை 04/08/2025

## பொலிஸ் நிலையத்திற்குள் வாகனத்தைச் செலுத்திவர் கைது

கனடாவின் மொண்ட்ரியல் நகரின் மேற்கு புறநகர்ப் பகுதியான வெஸ்ட்மவுண்டில், நகர மையத்திற்கு மேற்கே, பொலிஸ் தலைமையகத்தின் முன் கதவு வழியாக வாகனம் ஒன்று 02



# காற்று மாசடைவது தொடர்பில் கனடா முழுவதும் எச்சரிக்கை

**ப்ரைரி பகுதிகளில் இருந்து பரவிய காட்டுத் தீ புகை காரணமாக, கனடா முழுவதும் சிறப்பு காற்று தர எச்சரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.**

**காட்டுத் தீயால் உருவான புகை காரணமாக பார்வைத்திறன் குறைவதோடு, காற்றின் தரமும் மோசமடைந்து, சில பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை வரை இந்த நிலை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**இந்த அறிவிப்புகள் கிழக்கு பிரிட்டிஷ் கொலம்பியா முதல் மேற்கு கியூபெக் வரை பரவி, தீவிரத்தன்மையில் மாறுபடுகின்றன.**

வடமேற்கு பிரதேசங்கள், சஸ்காட்செவன், மனிடோபா மற்றும் ஒன்டாரியோவின் சில பகுதிகளில் காற்று தர எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த பகுதிகளில் மிக அதிக அளவு காற்று மாசு இருப்பதாக என்வயரன்மென்ட் கனடா தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பிரிட்டிஷ் கொலம்பியா, ஆல்பர்ட்டா மற்றும் கியூபெக் பகுதிகளில் காற்று தர அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன, அங்கு காற்று தரம் மோசமாக இருந்தாலும், உடல்நல அபாயம் குறைவாக உள்ளது.

காற்று தர எச்சரிக்கைகள் விடுக்கப்படுவதற்கு காற்று தர ஆரோக்கிய குறியீடு 10 அல்லது அதற்கு மேல் ஆறு மணி நேரத்திற்கு தொடர்ந்து இருக்க வேண்டும்.

அதேநேரம், காற்று தர குறியீடு 7 முதல் 10 வரை இருக்கும்போது சிறப்பு காற்று தர அறிவிப்புகள் விடுக்கப்படுகின்றன.

ஒன்டாரியோ, மனிடோபா மற்றும் சஸ்காட்செவனின் வடக்கு பகுதிகளில், குறிப்பாக மனிடோபாவின் பிளின் பிளான் மற்றும் சஸ்காட்செவனின் லா ரோஞ்ச் ஆகிய இடங்களுக்கு அருகில் மிக மோசமான காற்று தரம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.








# டொரொண்டோவில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம், வீதிகள் மூடப்பட்டன

டொரொன்டோவின் பொழுதுபோக்கு மாவட்டத்திற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.


டொரோன்டோ போலீசார் இந்தத் தகவலை தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை இரவு 10:30 மணியளவில் ஜான் ஸ்ட்ரீட் மற்றும் அடிலெய்டு ஸ்ட்ரீட் வெஸ்ட் பகுதியில் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டுள்ளது. பொலிஸார் உடனடியாக அங்கு சென்றுள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்தபோது, துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் ஒருவர் காணப்பட்டுள்ளார். அவரை உடனடியாக மருத்துவ உதவியாளர்களால் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது. விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்கில் வடக்கு நோக்கி செல்லும் ஜான் ஸ்ட்ரீட், அடிலெய்டு ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் ரிச்மண்ட் ஸ்ட்ரீட் வெஸ்ட் இடையே வீதி மூடப்பட்டதுடன், அடிலெய்டு ஸ்ட்ரீட் வெஸ்ட், ஜான் ஸ்ட்ரீட் மற்றும் விட்மர் ஸ்ட்ரீட் இடையேயும் மூடப்பட்டது. வாகன சாரதிகள் இந்தப் பகுதியைத் தவிர்த்து மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், ஏதேனும் தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.




## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே நுழைந்ததை அடுத்து ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதனால், கட்டடத்திற்குள் யாரும் காயமடையவில்லை என்று மொண்ட்ரியல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கலாம் மற்றும் அவர் நெருக்கடியான மனநிலையில் இருந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் பயங்கரவாதம் ஒரு காரணியாக கருதப்படவில்லை என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனினும் மேற்படி நபர் வேண்டுமென்றே வாகனத்தை பொலிஸ் நிலையத்தின் மீது மோதச் செய்தார் எனவும் முன் கதவில் கணிசமான சேதத்தை ஏற்படுத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

44 வயதான ஒருவர் இந்த சம்பவத்தை அடுத்து விரைவாக கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் சிறிய காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.






# கரீபியன் தீவுகளில் குடியுரிமை பெறுவதற்கு கனடியர்கள் அதிகம் நாட்டம் காட்டுகின்றனர்

கனடியர்கள் கரீபியன் தீவுகளில் குடியுரிமை பெற்றுக்கொள்ள நாட்டம் காட்டி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கனேடியர்கள் பயண விசா வசதிக்காக அல்ல, மாறாக வாழ்க்கை முறை, நெகிழ்வுத்தன்மை மற்றும் எதிர்கால பாதுகாப்புக்காக ரியல் எஸ்டேட் முதலீடு மூலம் குடியுரிமை பெறுவதை அதிகளவில் ஆராய்ந்து வருவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.


கிழக்கு கரீபியனில் உள்ள ஐந்து நாடுகள் தங்கள் அழகிய கடற்கரைகளை மட்டுமே விற்பனை புள்ளியாக முன்னிறுத்துவதை நிறுத்திவிட்டு, வெளிநாட்டினரை வீடு வாங்க அல்லது நன்கொடை வழங்குவதற்கு ஈடாக குடியுரிமை வழங்கும் முறையை பிரபலமாக்கியுள்ளன.

குடியுரிமை மூலம் முதலீடு திட்டங்களை வழங்கும் தீவு நாடுகள் அன்டிகுவா மற்றும் பார்புடா, டொமினிகா, செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ், செயின்ட் லூசியா மற்றும் கிரெனடா ஆகியன என்பது குறிப்பிடத்தக்கது. கனேடியர்களும் அமெரிக்கர்களும் ரியல் எஸ்டேட் மூலம் முதலீடு செய்து குடியுரிமை பெற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கரீபியன் கடவுச்சீட்டுக்கள் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விசா இல்லாத பயணத்தை வழங்குகின்றன, இதில் ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் சிங்கப்பூர் ஆகியவை உள்ளடங்குகின்றன. நைஜீரியா, பாகிஸ்தான் அல்லது வியட்நாம் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இது கவர்ச்சிகரமான ஓர் வாய்ப்பாக அமைகின்றது.

எனினும், கனேடியர்கள் வித்தியாசமானவர்கள். கனேடியர்களுக்கு ஏற்கனவே வலுவான கடவுச்சீட்டுகள் உள்ளன.

வாழ்க்கை முறை, வரி திட்டமிடல் அல்லது உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு ஒரு மாற்று பாதுகாப்பு திட்டமாக கனடியர்கள் இவ்வாறு கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



# பிரிட்டிஷ் கொலம்பிய கடற்கரையில் 4.0 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய கடற்கரையின் ஹைடா குவைக்கு மேற்கே 4.0 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ஞாயிற்றுக் கிழமை காலை 6:20 மணியளவில் ஏற்பட்டது எனவும் இது 15 கிலோ மீற்றர் ஆழத்தில் பதிவாகியுள்ளது எனவும் கனடிய பூமியதிர்வு கண்காணிப்பு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்றும், 4.0 ரிக்டர் அளவில் இதுபோன்ற சேதங்கள் எதிர்பார்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தின் தொடக்கத்தில், செவ்வாய்க்கிழமை ரஷ்ய கடற்கரையில் ஏற்பட்ட 8.8 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தை அடுத்து, பசிபிக் பெருங்கடலில் அலைகள் பரவியதால் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பின்னர் அந்த எச்சரிக்கை ரத்து செய்யப்பட்டது.

ஆனால் பிரிட்டிஷ் கொலம்பியாவின் அவசரகால மேலாண்மை அமைச்சர், இந்த சம்பவம் உள்ளூரில் ஒரு பெரிய நிலநடுக்கத்திற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நினைவூட்டுவதாக உள்ளது என தெரிவித்துள்ளார்.